செ. கு. எண்:055 நாள் :23.02.2016

**மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களின் அறிக்கை**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாட்டின் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பதவிகளிலும் பெண்களுக்கு 50 சதவீதம் இட ஒதுக்கீட்டை கட்டாயமாக்கிட தமிழக சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்ட, வரலாற்று சிறப்புமிக்க சட்ட முன்முடிவு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, தமிழக பெண்கள் மனதில் மாபெரும் எழுச்சியையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளதையும், இதன் காரணமாக தமிழகத்தில் உள்ள பெண்களின் ஆதரவு மாண்புமிகு அம்மா அவர்கள் பக்கம் ஒட்டு மொத்தமாக சார்ந்து விட்டதையும், இந்த புரட்சிகரமான சட்டத்தை உலகப் பெண்ணினமே உவந்து பாராட்டி மகிழ்வதையும் பொறுத்துக்கொள்ள முடியாத தி.மு.க. எம்.பி.யான கனிமொழி விரக்தியின் விளிம்புக்குச் சென்று தனது அரசியல் காழ்ப்புணர்ச்சியை வார்த்தையாக வடித்திருக்கிறார்.

“பெண்களுக்கான 50 சதவீத இட ஒதுக்கீட்டை 110வது விதி அறிவிப்பால் நிறைவேற்ற முடியாது” என்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்து, தனது அறிவிலித்தனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறார் கருணாநிதியின் மகளான கனிமொழி!

“ஊருக்கெல்லாம் பலன் சொல்லுமாம் பல்லி, கழனிப் பானைக்குள்ளே விழுமாம் துள்ளி!” என்ற கதையாக, மெத்தப் படித்த மேதாவி போல கருத்துச் சொல்ல விழைந்த கனிமொழி தனது பேட்டியின் தொடக்கத்திலேயே முற்றிலும் தவறாக உளறிக் கொட்டியிருக்கின்றார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவீத இட ஒதுக்கீடு அறிவித்து உள்ளதாகவும், அந்த

அறிவிப்பும் வெற்று அறிவிப்பாகத் தான் தெரிகிறது என்றும் பிதற்றி இருக்கிறார் கனிமொழி.

உள்ளாட்சிப் பதவிகளில் 50 சதவீத இட ஒதுக்கீட்டை பெண்களுக்கு கட்டாயமாக்குவது என்பது, விதி 110ன் கீழ் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்த அறிவிப்பு அல்ல என்பதையும், மக்களுக்கு நன்மை அளிக்கும் திட்டங்களை எப்படிச் செய்தால், அது தடையோ, தடங்கலோ இன்றி நிறைவேற்றப்படும், வெற்றிகரமாக முடிக்கப்படும் என்பதை நன்குணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட சட்டத் திருத்த சட்ட முன்வடிவாகும் என்பதையும் கனிமொழி முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்த சட்ட முன்வடிவு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் என்கிற முறையில் 20.02.2016 அன்று சட்டப் பேரவையில் கொண்டுவரப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்களின் முன் வைக்கப்பட்டு, சட்டமன்றப் பேரவையில் நன்கு ஆய்வு செய்யப்பட்டு பின் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இது புரியாமல், இது ஏதோ, விதி 110 ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு என்று தப்பும் தவறுமாக பேட்டி அளித்திருக்கிறார் கருணாநிதியின் மகள் கனிமொழி.

அதுமட்டுமல்ல, இட ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் என்றால், அதற்கு முறையான சட்டத் திருத்த மசோதா சட்டசபையில் தாக்கல் செய்ய வேண்டும் எனவும், அதன் மீது விரிவான விவாதம் நடத்த வேண்டும் எனவும், அறுதிப் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன், அந்த சட்டமசோதா நிறைவேற்றப்பட வேண்டும் எனவும், அதன்பின் கவர்னர் ஒப்புதல் பெற்று சட்டமாக்கப்பட வேண்டும் எனவும் பாலபாடம் எடுத்திருக்கிறார் கனிமொழி.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்ட நடைமுறைகள் அனைத்தும் நன்கறிந்தவர். அதனால்தான், சட்டத் திருத்த சட்ட

முன்வடிவை சட்டப்பேரவையில் முறைப்படி தாக்கல் செய்து, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் முன்வைத்து ஆய்வு செய்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை கனிமொழியின் அறிவுக்கு எட்டுகிற வகையில், ஆணித்தரமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

உள்ளாட்சிப் பதவிகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிப்பது என்பது, அரசியல் வரலாறு தெரியாத கனிமொழிக்கு வேண்டுமென்றால் புதிதாக இருக்கலாம். ஆனால், அம்மா அவர்களுக்கு இது புதிது அல்ல.

''பொறுப்பு வழங்கப்பட்டால், பெண்கள் தங்கள் தலையெழுத்தை மட்டும் அல்லாமல், மற்றவர்களின் தலையெழுத்தையும் மாற்ற முடியும்'' என்ற திண்ணமான நம்பிக்கையுடன், நாட்டை வழி நடத்துவதில் பெண்களுக்கு உரிய பங்கு வழங்குவதில், நாட்டிலேயே முன்னோடித் தலைவராக திகழ்பவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

எந்த அரசியல் கட்சியிலும் இல்லாத வகையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் அனைத்து நிலைகளிலும் உள்ள நிர்வாகப் பொறுப்புகளில் மகளிருக்கு 33 சதவீத ஒதுக்கீடு தந்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்பதை கனிமொழிக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, உள்ளாட்சிப் பதவிகளில் மகளிருக்கு என்று தனி ஒதுக்கீடு எதுவும் இல்லாதிருந்த நிலையில், அவர்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் சட்டம், மாண்புமிகு அம்மா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது, 1994 ஆண்டில், கொண்டுவரப்பட்டது என்பதை கனிமொழி அறிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மற்றும் மாவட்ட

ஊராட்சிகள் ஆகியவற்றில் உள்ள இடங்கள் மற்றும் பதவிகளின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு பெண்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்குக் காரணமே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான்.

அது மட்டுமல்ல, கடந்த உள்ளாட்சித் தேர்தலில், மொத்தம் உள்ள 12 மாநகராட்சிகளில் 7 மாநகராட்சிகளில் பெண்களை மேயர் பதவியில் அமர்த்தி, பெண்களுக்கு 50 சதவீதத்திற்கும் அதிகமான இடஒதுக்கீட்டை வழங்கியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

இப்படி உள்ளாட்சி அமைப்புகளின் பதவிகளில் பெண்களுக்கு தற்போதுள்ள ஒதுக்கீடு மேலும் உயர்த்தப்படுமேயானால், இன்னும் அதிக அளவில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்கள் பங்கு பெறுவதை உறுதி செய்ய முடியும் என்பதுடன், அதன் வாயிலாக, நகரம் மற்றும் கிராமப்புறங்கள் விரைந்து வளர்ச்சி அடையும் என்ற திடமான நம்பிக்கையுடன், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் மூன்றில் ஒரு பங்கு என பெண்களுக்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள பதவிகள் 50 சதவீதம் ஆக உயர்த்தப்படவேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் இந்த ஆணையின் அடிப்படையில் தான் இதற்கான புதிய சட்டத் திருத்த சட்ட முன்வடிவு, தமிழக சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் மேலும் ஒரு படி முன்னே சென்று நாட்டை முன்னேற்றப்பாதையில் வழி நடத்திச் செல்வதில் பெண்களின் திறமையையும், வல்லமையையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், பெண்ணினத்திற்கே ஒரு வரப்பிரசாதமாக, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கனிந்த உள்ளத்துடன் வழங்குகின்ற பெண்களுக்கு 50 சதவீத இட

ஒதுக்கீட்டை தடுத்து நிறுத்தும் எண்ணத்துடன் கனிமொழி தனது கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்.

ஒரு பெண்ணாக இருந்தும், பெண் இனத்திற்கு சம உரிமை அளித்து அவர்களை சமுதாயத்தின் உச்சத்தில் தூக்கி நிறுத்துகிற வகையில், சட்ட மன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட இச்சட்ட முன்வடிவை வரவேற்பதை விடுத்து, அரசியல் ஆதாயத்திற்காக பெண்ணினத்தின் விரோதியாகவும், தமிழக பெண்களின் துரோகியாகவும் மாறி அரைகுறை அறிவுடன் கருத்துக்களை அள்ளித் தெளித்திருக்கிற கனிமொழியை என்ன என்று சொல்வது என்று புரியாமல் தமிழகத்தின் பெண்ணுரிமை ஆர்வலர்கள் திணறிக்கொண்டிருக்கிறார்கள்.

கனிமொழி, கருணாநிதியின் மகள் என்பதால், எவ்வித உழைப்பையும் நல்காமல், தியாகங்கள் எதுவும் செய்யாமல், தன்னுடைய தந்தையின் பெயரைப் பயன்படுத்தி அவரால் பாராளுமன்ற உறுப்பினர் ஆக முடியும். அவர்களுடைய கட்சியில் ஸ்டாலினை பின்னுக்கு தள்ளி அவரை விட பெரிய பதவியில் கூட அவரால் அமர முடியும். ஆனால், மற்ற பெண்கள் அப்படியா? அவர்கள் வாழ்க்கையில் முன்னேற எப்படியெல்லாம் சிரமப்படவேண்டியிருக்கிறது. எத்தகைய இக்கட்டுக்களை எல்லாம் தாண்டி வர வேண்டி இருக்கிறது. பொது வாழ்வில் இருக்கும் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்களும், துயரங்களும் கொஞ்சமா? நஞ்சமா!

தங்கள் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் பெண்கள் எத்தனை துன்பப்பட்டு, துயரப்பட்டு, இடையூறுகளை முறியடித்து முன்னேறி வரவேண்டி இருக்கிறது என்பதை அறிந்த காரணத்தால்தான் மகளிர் மேம்பாட்டிற்கும், மகளிரின் சம உரிமைக்கும் ஏராளமான திட்டங்களை உருவாக்கி எண்ணிலா நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

- தொட்டில் குழந்தைத் திட்டம்
- பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்
- மகளிர் எழுத்தறிவுத் திட்டம்
- பெண்களின் சுகாதாரத்தினை பேணும் வகையில் விலையில்லா சானிட்டரி நாப்கின் வழங்கும் திட்டம்

- மகளிர் சுகாதார வளாகங்கள்
- பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுத்திட 13 அம்சத் திட்டம்
- 24 மணி நேரம் மகப்பேறு மருத்துவ சேவை அளிக்கும் திட்டம்
- தாலிக்கு தங்கத்துடன் உதவித் தொகை வழங்கும் பெண்கள் திருமண உதவித் திட்டம்.
- தாய் சேய் நலன் காக்கும் வகையில் நிதி உயர்வு அளித்து திருத்தியமைக்கப்பட்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டம்
- பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் பெண்கள் எழுத்தறிவுத் திட்டம், தொடர்கல்வித் திட்டம், அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலேயே பள்ளிகள், கல்லூரிகள்,
- அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்,
- மகளிர் நீதிமன்றங்கள்
- மகளிர் சிறப்பு அதிரடிப் படை
- பெண்களின் பொருளாதார நிலையை தாங்களே உயர்த்திக் கொள்ளும் வகையில் சுய உதவிக் குழுக்கள்
- மகளிர் தொழில் முனைவோருக்கான பிரத்யேக தொழிற்பேட்டைகள்
- 6 இலட்சத்து 8 ஆயிரம் மகளிர் சுய உதவிக்குழுக்களின் 92 இலட்சத்து 9 ஆயிரம் மகளிர் உறுப்பினர்களுக்கு, 25,933 கோடி ரூபாய் கடனுதவி
- பணிபுரியும் மகளிர் விடுதிகள்
- அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களுக்கு 6 மாத கால மகப்பேறு விடுப்பு
- விலையில்லா கறவைப் பசு, வெள்ளாடுகள் வழங்கும் திட்டம்
- வீட்டில் பணிச் சுமையைக் குறைத்திட விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி வழங்கும் திட்டம்

என எண்ணற்ற முன்னோடித் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வரிசையில்தான், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பதவிகளில் பெண்களுக்கென தம்முடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு வழங்கியதும், தற்போதைய ஆட்சியில் அதையே மேலும் உயர்த்தி ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானமாக, 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்கிட நடவடிக்கை எடுத்துள்ளதும் ஆகும்.

ஆனால் பெண்கள் முன்னேற்றம் பற்றி வாய் கிழியப் பேசும் கருணாநிதி உள்ளாட்சிப் பதவிகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்று இதுவரை சிந்தித்தது கூட கிடையாது. திமுக ஆட்சிக் காலத்தில் வாய்ப்பிருந்த போதெல்லாம் வாய் மூடிக் கிடந்துவிட்டு இப்போது வாய்ச் சொல் வீரர்களாத் திகமும் திமுகவினருக்கு இது பற்றிப் பேசும் அருகதை உள்ளதா என்பதையும் உள்ளாட்சி பதவிகளில் பெண்களுக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்கும் சட்ட முன்வடிவு தாக்கல் செய்யப்படவுள்ளது என்பதை அறிந்து சட்டமன்றத்தையே புறக்கணிப்பு செய்த திமுகவினருக்கு இது பற்றி பேச என்ன தகுதி இருக்கிறது என்பதையும் கனிமொழி சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இது வெற்று அறிவிப்பு என்றும், உள்ளாட்சி அமைப்பு தேர்தலுக்கு வெகு குறுகிய கால அவகாசம் தான் உள்ளது என்றும், அதற்குள்ளாக இதை அமல்படுத்துவது சந்தேகம் தான் என்றும் கூறியிருக்கிறார் கனிமொழி.

இந்தியாவிற்கு முன்னோடியாக திட்டங்களை நிறைவேற்றி, சாதனை படைத்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நாளும் நாளும் செல்வாக்கு பெருகி வருவதை சகித்துக்கொள்ள முடியாமல், மக்கள் செல்வாக்கை இழந்து விட்ட கருணநிதி இப்போது மகளிர் செல்வாக்கையும் ஒட்டு மொத்தமாக இழந்து விட்டாரே என்ற மன விரக்தியின் காரணமாக, பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளின்

பதவியில் 50 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்குவதை நிறைவேற்ற முடியாது என்று குரல் கொடுத்துப் பார்க்கிறார் கனிமொழி.

உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் நடைபெறவும், அத்தேர்தலில் பங்கேற்று வெற்றி பெற்று பதவியில் அமர்வதற்கும் இன்னும் 8 மாதங்கள் இருக்கின்றன. எனவே அமல்படுத்த முடியாமல் போகுமோ என்ற அச்சம் கனிமொழிக்குத் கிஞ்சிற்றும் தேவையில்லை என்றும், வெகு விரைவிலேயே இந்த சட்ட முன்வடிவு சட்டமாக்கப்படும் என்றும், இந்த சட்டத்தின்படி 2016ம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடைபெற இருக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் பெண்கள் பெருமளவில் பங்கேற்று, வெற்றி பெற்று, 50 சதவீதம் பதவிகளில் பெண்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அமர வைப்பார்கள் என்பதை பெண்ணின விரோத சக்தியாகத் திகழும் கனிமொழிக்கு உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி,**
**சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்**
**சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**